DEPOSITION OF WITNESS

**IN THE COURT OF THE DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE**

**UTHIRAMERUR.**

**CC. No. 8 of 2025**
**LW-5 Examined as PW-6**

| | |
|---|---|
| Name:**தீனதாயாளன்** | Age: |
| Father Name: **கங்காதரன்**<br>Husband Name: | Profession: |
| Address: | |
| The Oath was administered to the witness by Tmt.Abirami, Gr.III Bench Clerk and was solemnly affirmed by the witness in accordance with the provisions of the Oaths Act of 1969 on 29.07.2026 | |

**<u>29.07.2026</u>**

எதிரி ஆஜர்.

**விசாரணை தொடங்கிய நேரம் 11.35 AM**

**அ.சா.6. – முதல் விசாரணை**

நான் டிரைவராக வேலை செய்துவருகிறேன். அ.சா.1 எனது அப்பா ஆவார். கடந்த 20.05.2024 ம் தேதி நீதிமன்ற ஆஜர் எதிரி எனது அப்பாவை ஆஜர் எதிரியின் கோழியை எனது அப்பா வளர்த்துவரும் நாய் கடித்துவிட்டது என்று கூறி கட்டையை எடுத்து மேற்படி நாய்யை அடித்துள்ளார். அப்போது அந்த கட்டை அ.சா.2 தர்ஷினி காலின் மேல் பட்டு காயம் ஏற்பட்டதாக கேள்விபட்டேன். அதன் பின்பு மாலை சுமார் 7.10 மணிக்கு ஆஜர் எதிரி குடிபோதையில் வந்து எனது அப்பாவை கையால் அடித்து கீழே தள்ளிவிட்டுள்ளார். அதனால் எனது அப்பாவிற்கு இடுப்பு எலும்பு உடைந்துவிட்டது. மேற்படி தகவலை நான் போன் மூலமாக அறிந்து மறுநாள் நான் செங்கல்பட்டு அரசு மருத்துவமனையில் எனது அப்பாவை பார்த்தேன். பிறகு எனது வீட்டிற்கு வந்தேன். அப்போது சாலவாக்கம் போலிசார் சம்பவ இடத்திற்கு வந்தனர். அங்கு சம்பவ இடத்தை பார்வையிட்டு வரைபடம் வரைந்தார்கள். என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள முதல் சாட்சி கையொப்பம் என்னுடையதுதான்.

மேற்படி எதிரி எனது அப்பாவை அடிக்க பயன்படுத்திய கட்டையை போலிசார் சம்பவ இடத்தில் கைப்பற்றினர். மேற்படி கைப்பற்றுதல் மகசரில் உள்ள முதல் கையொப்பம் என்னுடையதுதான். **மேற்படி பார்வை மகசரில் உள்ள முதலாவது சாட்சி கையொப்பம் அ.சா.ஆ.4 ஆகவும், கைப்பற்றுதல் மகசரில் உள்ள முதலாவது சாட்சி கையொப்பம் அ.சா.ஆ.5 ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.** போலிசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

எனது வீட்டிற்கு அருகில் வீடுகள் உள்ளதா என்றால் உள்ளது. சம்பவத்தை நான் நேரடியாக பார்க்கவில்லை என்றால் சரிதான். மருத்துவமனையில் இருந்து நான் மறுநாள் எத்தனை மணிக்கு வீட்டிற்கு வந்தேன் என்றால் காலை சுமார் 7.00–7.30 மணியளவில் வீட்டிற்கு வந்தேன். நான் சம்பவ தன்று தகவல் தெரிந்து மருத்துவமனைக்கு அன்று இரவே சென்றேன் என்றால் சரியல்ல. நான் மருத்துவமனைக்கு சென்றபோது போலிசார் எனது தந்தையை விசாரித்தார்களா என்றால் நான் சென்றபோது போலிசார் அங்கு இல்லை. அதற்கு முன்பாக போலிசார் வந்து விசாரணை செய்தார்களா என்ற விவரத்தை எனது தாயாரிடம் கேட்டு தெரிந்துக்கொண்டேனா என்றால் இல்லை. நான் மருத்துவமனைக்கு சென்றதாக சொல்லும் தினத்தன்று எனது தாயார் எனது தந்தையுடன் மருத்துவமனையில் முழுவதும் இருந்தாரா என்றால் சரிதான்.

எத்தனை போலிசார் சம்பவ இடத்திற்கு வந்தார்கள் என்றால் 2 போலிசார் வந்தார்கள். அவர்கள் உதவி ஆய்வாளர் மற்றும் ஆய்வாளர் இல்லை என்றால் எனக்கு அந்த விவரம் தெரியாது. 2 போலிசார் வந்தார்கள். நான் கையொப்பம் செய்த தாளில் என்ன எழுதியுள்ளது என்ற விவரம் தெரியுமா என்றால் நான் கையொப்பம் செய்தபோது படித்து பார்த்தேன். தற்போது தெரியாது. எத்தனை கையொப்பம் செய்தேன்

என்றால் இரண்டு கையொப்பம் செய்தேன். நான் சம்பவத்தை நேரில் பார்க்காத நிலையில் மேற்படி கட்டையால் தான் எதிரி தாக்கியதாக எவ்வாறு நான் தெரிந்துக்கொண்டேன் என்றால் என் உடன் இருந்த விக்னேஷ் என்பவர் அந்த விவரத்தை சொன்னார். எத்தனை நபர்கள் அச்சமையத்தில் இருந்தோம் என்றால் நானும் விக்னேஷும் தான் இருந்தோம். விக்னேஷ் எனக்கு யார் என்றால் எனது ஊர்காரர் ஆவார். நான் கையொபம் செய்த தாள் அச்சிடப்பட்ட தாள் இல்லை என்றால் சரிதான். போலிசாரால் கையில் எழுதப்பட்ட தாளில் தான் கையொப்பம் செய்தேன். மேற்படி போலிசார் என்னை விசாரணை செய்தார்களா என்றால் கையொப்பம் பெற்றுசென்றபோது விசாரணை செய்தார்கள் அதனை பின்னிட்டு விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்யவில்லை.

இந்த வழக்கு புகாரை யார் அளித்தது என்றால் எனது தங்கை தனலட்சுமிதான் அளித்தார். வழக்கின் விவரங்கள் எனக்கு தெரியாது என்றாலும் எதிரி என்னுடைய தந்தையை கட்டையால் அடித்ததாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. நான் சொல்வதுபோல் சொன்ன இடத்தில், நேரத்தில் தேதியில் வைத்து பார்வை மகசரில் கையொப்பம் செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் சொல்வதுபோல் சொன்ன இடத்தில், நேரத்தில் தேதியில் வைத்து எந்த வழக்கு சொத்தும் கைப்பற்றப்படவில்லை என்றால் சரியல்ல.வழக்கு சொத்து போலிசாரால் காவல் நிலையத்தில் வைத்து உருவாக்கப்பட்ட ஒன்று என்றால் சரியல்ல. என்னுடைய தந்தைக்கு பவ்வியப்பட்டும் போலிசார் கேட்டுக்கொண்டதற்கு இணங்க பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

**அரசு தரப்பு மறுவிசாரணை இல்லை.**

**விசாரணை முடிக்கப்பட்ட நேரம் 11.55 AM**

Nature of witness: Observation and sezure mahazer witness

**Sd/-R.கிருத்தியா,**
**மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர்,**
**உத்திரமேரூர்.**